முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சடைய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

07.12.2018, வெள்ளிக்கிழமை

1. **ஏழ்மையை விரட்டி மீட்டிட**
**ஏழைகளின் வாழ்வு சிறந்திட**
**தாள்பணிந்து பல பிறவி கண்ட**
**தவபலத்தை உலக மக்களுக்கு**

2. மக்களுக்கு அறமாக்கி அருளும்
மாதவசியே ஆறுமுக அரங்கனே
தேக்கமிலா உன் வழி மக்கள் வர
தேறுவர் நிலை உயருவர் எனக் கூறி

3. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே மூவேழு திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 21ம் நாள் 07.12.2018, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு சடைய நாயனார் யானும்**

4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் வேலி அமைத்து காக்கும்
தானதரும அரங்கன் நெறியை
தட்டாது உலக மக்கள் பின் தொடர

5. தொடர்ந்து அரங்க ஞானியை கண்டு
தெளிவு திடம் காண தீட்சை பெற
இடர்கள் என்பது அணுகாத
ஏற்றம் கண்டு உலகோர் சிறப்பர்

6. சிறப்பு தரும் அரங்கன் மலரடி
செயல்மிக்க சேவைகளும் மிக்க
அறம் மிகுந்த ஞானத்திருவடி தன்னால்
அனைவரும் வணங்கி வருதலுற

7. வருகவே இயற்கை வழியான
வருகின்ற அழிவுகள் அகலும்
தரும பலம் பெருக்கம் காண
தண்ணீர் பஞ்சம் வாரா வாழ்வும்

8. வாழ்வினில் வறுமை கஷ்டம்
வன்கொடுமை இனபேதம்
தாழ்வென அதிகார துவேசம்
தன்னலமாய் இயங்கும் சமூக அவலம்

9. அவலம் யாவும் அகன்றோடி
அமைதி சமத்துவம் சமதர்மம்
புவனம் எங்கும் ஒன்றேயெனும்
புண்ணிய வழியான செயல் கொள்கை

10. கொள்கை தத்துவமே முழுவதும்
குருராசனின் ஜீவகாருண்யமே
ஆள்பவரும் ஏற்று பின்தொடர
ஆறுமுகன் தலைமை கொண்டநல்

11. கொண்டநல் ஞானயுகமாக
குவலயமே மாற்றம் காணும்
கண்டிட கலிவாழ் மக்களே
கட்டாயம் அரங்கஞானி வழிக்கு வாரீர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சடைய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகினில் உள்ள வறுமை துன்பத்தினை போக்கி வறுமையில் வாடும் மக்களை மீட்டு அவர்களின் வாழ்வு சிறந்திட வேண்டி பல பிறவிகள் ஞானிகள் திருவடி பற்றி பூஜித்து தவமாய் தவம்தனை பல பிறவிகளாய் செய்து செய்து, தாம் பெற்றிட்ட தவபலத்தையெல்லாம் அறமாக ஆக்கி உலக மக்களுக்காக அளித்து அருள் செய்து காக்கின்ற அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 21ம் நாள் 07.12.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சடைய நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சடைய நாயனார்.

மகா தவசி ஆறுமுக அரங்கனே உமது அற்புதமான ஞானக்கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வாழ்வினில் தவறாமல் கடைப்பிடித்து உமது திருவடி பணிந்து உம்மை பின் தொடருபவர்கள் எல்லாம் ஜென்மத்தைக் கடைத்தேற்றி நிலை உயர்வார்களப்பா.

அளவிலாது தர்மங்களைச் செய்து செய்து, தருமபலம் பெருக்கி உலகினில் அறவேலிதனை அமைத்து உலக மக்களை காக்கும் தானதரும வள்ளல் ஞானி ஆறுமுக அரங்கனின் தூயநெறிகளை தட்டாமல் தவறாமல் ஏற்று பின்தொடர்ந்து வருவதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு சென்று பயபக்தியுடன் பணிந்து வணங்கி அவரவரும் தெளிவும் மனோதிடமும் பெற்றிட அரங்கனிடத்து தீட்சை உபதேசம் அடைந்திட்டால் அவரவரைப் பற்றிய துன்பங்கள் என்பது அணுகாத நல்வாழ்வை வாழ்ந்து உயர்வான நிலைகளை அடைந்து சிறப்படைவார்கள்.

சர்வசிறப்புகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்கன் மலரடியை, செயல் வேகம் மிகுந்ததும் மக்களை காப்பதுமாகிய அற்புத சேவைகளை எல்லையில்லாது செய்து செய்து அறம் மிகுந்து விளங்கும் அறத்தினால் ஆகிய அரங்கனின் ஞானத்திருவடியை எல்லோரும் பயபக்தியுடன் வணங்கி வரவர, இயற்கையினால் உண்டாகும் பேரிடர்களும், அழிவுகளும் அகன்று ஓடிடும்.

அரங்கனை பின் தொடர்ந்து அனைவரும் தர்மம் செய்து தர்மபலம் பெருக்கிட தண்ணீர் பஞ்சம் இல்லாத வளமான சூழ்நிலைகள் உருவாகிடும். மக்களது வாழ்வினில் வறுமை துன்பம் இல்லாது, வளமான வாழ்வு உண்டாகி, வன்கொடுமை நீங்கி இனபேதம் பார்க்காத நல்சமுதாயம் உருவாகி ஏற்றத் தாழ்வு பாராத அதிகார துவேசம் கொண்டு தன்னலமாய் இயங்குகின்ற சமூக அவலம் எல்லாம் நீங்கி அமைதியும், சமநீதியும், சமத்துவமும், சமதர்மமும் பெருகி இவ்வுலகம் எல்லாம் ஒன்றுபட்ட உலகமாக ஆகி உலகம் முழுதும் புண்ணிய வழியினால் ஆகிய செயல் கொள்கை தத்துவமே உலகம் முழுதும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல்படும்.

தருமத்தால் ஆனதும் பிறவித்துயரை ஒழிப்பதும் மரணமிலாப் பெருவாழ்வை தரவல்லதும், பஞ்சபூதங்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கதான அரங்கனின் ஜீவகாருண்ய கொள்கையை நாட்டினை ஆளும் ஆட்சியாளர்கள் ஏற்று ஜீவதயவுடன் ஆட்சி புரிந்திட்டால் உலகினில் முருகப்பெருமான் தலைமையில் உண்டாகும் ஞானஆட்சி உருவாகி உலகம் ஞானயுகமாக யுகமாற்றத்தை அடைந்திடும்.

ஆதலினால் இவ்வுலகம் கலியுகத்தின் துன்பத்தில் இருந்து மீண்டு நல்யுகமான ஞானயுகமாக விரைந்து மாறிட கலியுக மக்களே அவசியம் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூய ஞானவழிக்கு உடன் விரைந்து வாரீர் வாரீர் ஆறுமுக அரங்கனின் தர்மகொள்கையே இவ்வுலகை மாற்றும் வல்லமைமிக்க கொள்கையாகும், உடன் விரைந்து வாரீர் வாரீர் அரங்கரிடத்து என உலக மக்களை யுகமாற்றம் நடத்திட அழைப்பு விடுக்கிறார் மகான் சடைய நாயனார்.

–சுபம்–